நம்பிக்கையில் இத்திட்டத்தில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் பதவியில் இல்லை. ஆகவே அதை அவர்களுக்குத் திருப்பித் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது திருப்பித் தரும் நிலை இல்லை. பணி முடிவு ஏற்பட்டதற்குப் பிறகு, திருப்பித் தருவதற்குரிய சூழ்நிலை ஏற்படாது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : ரொக்கமாகக் கொடுத்தால், அதைச் சீக்கிரமாகச் செலவழித்துவிட்டு அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்தத் தொகையை பிக்செட் டிப்பாசிட்டில் போட்டுக் குறைந்தது ஐந்து வருடங்களுக்கு எடுக்க முடியாத அளவிற்கு ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது வாங்குபவர்களின் நிலையைப் பொறுத்தது. சிலபேர் மொத்தமாக வாங்குவதைத்தான் விரும்புவார்கள். அப்படிப்பட்ட கோரிக்கைகள் வருமானால், அதை வைத்து முடிவு செய்யலாம். இப்போது முழுத் தொகையையும் வாங்குகிற தன்மையைத் தான் மேற்கொண்டிருக்கிறோம்.

ஆசிரியர்களின் சம்பள வீதங்கள்.

*162 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோரின் கல்வித் தகுதி, வேலைத்திறன் அடிப்படையில், மூன்றாவது தமிழ்நாடு ஊதியக் குழு, அவர்களுடைய ஊதியத்தை நிர்ணயிக்கவில்லை என்றும் இக்குறைபாட்டை நிவர்த்திக்குமாறும், பல்வேறு ஆசிரியர் சங்கங்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கைகள் திரு. சி. வி. ஆர். பணிக்கர், இ.அ.ப. அவர்களின் தலைமையிலான ஒரு நபர் குழுவின் ஆய்வுக்கு விடப்பட்டன. அக்குழு இவ்வூதிய விகிதங்களில் முரண்பாடு எதும் இல்லை என்று கூறி ஏற்கெனவே உள்ள ஊதிய விகிதங்கள் சரியானவையே என்று அறிவித்திருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறிய செய்தி எங்களுக்கு அதிர்ச்சியைத் தரக்கூடியதாக இருக்கிறது. இதற்கான வலுவான காரணங்களை நாங்கள் அந்தக் குழுவிடம் எடுத்துச் சொன்னபோது, இதை ஏற்றுக்கொள்வதைப் போல ஒரு உணர்வை அந்தக் குழு ஏற்படுத்தியது. இந்தப் பிரச்சினை எத்தனை நீண்ட காலமாக இருக்கிறது என்பது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஏனென்றால் அவர் இதோடு தொடர்பு கொண்டிருந்தவர். பணிக்கர் குழு இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், அரசு நிதித் துறை மீண்டும் இதை மறுபரிசீலனை செய்யலாம். ஆகவே, இந்தக் கோரிக்கையைக் குறித்து ஆய்வு நடத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து பேச வாய்ப்புக்களை உருவாக்கித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சி. வி. ஆர். பணிக்கர் குழு கொடுத்திருக்கிற அறிக்கையில்,

"Possession of Post-graduate qualification is the minimum requirement for the promotion either as Headmaster or Teacher Grade I. The scale of pay of Headmaster in the Higher Secondary School is Rs. 750 to Rs. 1,350 with Selection Grade on Rs. 850 to Rs. 1,500 and that of Teacher Grade I is Rs. 675 to Rs. 1,200 with Selection Grade on Rs. 750 to Rs. 1,350. Hence, no change is required in these scales of pay recommended by the Third Pay Commission which are reasonable."
என்று சொல்லிவிட்டு,

"It is understood that B.T. teachers possessing M.Ed. are given two advance increments. The Government may examine whether a similar concession may also be given to Post-graduate teachers in the Higher Secondary Schools."
என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே எம்.எட். படித்தவர்களுக்கு இரண்டு அட்வான்ஸ் இன்கிரிமென்ட் கொடுக்கிற தன்மை இருந்தது, அதை அரசு ஆராயலாம் என்று அந்தக் குழு குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், மற்ற ஊதிய விகிதங்களைப் பொறுத்த வரையில், மூன்றாவது ஊதியக் குழு கொடுத்த பரிந்துரை சரிதான் என்று ஒரு நபர்க் குழு தீர்மானித்திருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஓர் இடைநிலை ஆசிரியர் எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு இரண்டாண்டுக் காலம் பயிற்சி பெறுகிறார். இந்த இரண்டாண்டுக் கால பயிற்சியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு ஊதியத்தை நிர்ணயிக்கவில்லை. பட்டதாரி ஆசிரியர்கள் டிகிரியை முடித்துவிட்டு மறுபடியும், பி.டி., பி.எட். படித்து மேலும் ஒரு டிகிரியைப் பெற வேண்டியிருக்கிறது. அதற்குரிய

மதிப்பையும் கணக்கிலே எடுத்துக்கொள்ளவில்லை. பட்டதாரி ஆசிரியர்களுக்கு 450 ரூபாய் ஊதியத்தையும், போஸ்ட்-கிராஜுவேட் தகுதியுடையவர்களுக்கு 675 ரூபாய் என்றும் நிர்ணயித்திருப்பதில் எவ்வளவு இடைவெளி இருக்கிறது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எளிதாக உணரலாம். இதை யெல்லாம் மிக விரிவாக மனுக்கள் மூலமாகச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்போதும் விரிவாகத்தான் கேட்கிறார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆகவே ஒரு நபர்க் குழுவின் முடிவு சரியான முடிவாகத் தெரியவில்லை. ஆகவே, அரசு ஊழியர்களுக்கு மீண்டுமொரு வாய்ப்பு கொடுத்தால் இதைப்பற்றி விளக்க முடியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சீக்கிரமாக முடிக்க வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதுபோன்ற பல கேட்டகரிசுக்கு அர்சால் ஊதிய விதம் மாற்றப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த வகையிலே இதுகுறித்தும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த நிலைமைகளை எல்லாம் விளக்கி, விண்ணப்பமாக உறுப்பினர் அவர்கள் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமானால் அதற்குப் பிறகு விவாதமாக வைத்துக் கொள்ளலாம். முதலிலே விண்ணப்பமாகத் தரட்டும். அதற்குப் பிறகு அதைப் பற்றி ஆராயலாம்.

செல்வி அ. லீலாவதி : எம்.எட். படித்தால் அவர்களுக்கு ஊக்க ஊதியம் இரண்டு கொடுக்கப்படுகிறது என்று கூறினார்கள். இடைநிலை ஆசிரியர்கள் அம்மாதிரி பி.எ. படித்தவுடன் கொடுப்பதில்லை. பி.டி. முடித்த பிறகுதான் கொடுப்பது என்று இருக்கிறது. செக்காட்டேரியட்டில் பி.எ. முடித்தால் கொடுக்கப்படுகிறது. அதுபோல் இவர்களுக்கும் ஊக்க ஊதியம் கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் ஆராயலாம்.

1981 மார்ச் 25]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தொடர்புடைய பிரச்சினைகள் என்று வருகின்றபோது ஒரு நபர்க் குழுவின் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று இங்கே சொல்கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலே ஒரு சில பிரச்சினைகளிலேயும் இந்த ஒரு நபர்க் குழுவினுடைய அறிக்கையிலே இப்படி குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று சொல்கின்றார்கள். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் எல்லாம் பல்வேறு சூழ்நிலைகளிலே பல கோரிக்கைகளை இந்த ஒரு நபர்க் குழு ஏற்றுக்கொண்டிருக்கும் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். இப்போது அதிர்ச்சி தருகின்ற அளவுக்கு கருத்தினைச் சொல்கின்றார்கள். இதுபோலவே மற்ற ஊழியர்கள் பற்றியும் இப்படித்தான் அதிர்ச்சி தரக்கூடிய அளவில் இருக்கிறதா என்பது தெரியவில்லை. அந்த ஒரு நபர்க் குழுவின் அறிக்கையை அரசு விரைவில் வெளியிடுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊழியர்களும் மற்றவர்களும் அக மகிழ்வு பெறும் செய்திகள்தாம் அறிக்கையில் ஏராளமாக இருக்கின்றன. அதிர்ச்சி தரத்தக்கதாக இருப்பதைச் சுட்டிக்காட்டினால், அதைப்பற்றி ஆராயலாம். அதிர்ச்சிக்குள்ளாக்குகின்ற காரணங்களை எடுத்துக்காட்டி அதற்கு விண்ணப்பங்கள் கொடுத்தால், மறுபடியும் அதைப்பற்றி ஆராயலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : நிதிநிலை அறிக்கையிலே, 100 பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு ஊதிய விகிதம் மாற்றியமைக்கப்பட்டு, அவர்களுக்குச் சில சலுகைகளும் வழங்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், அந்த 100 அலுவலர்கள் யார் யார் என்று தெரியவில்லை. அதைப்பற்றி விரைவிலே அவைக்கு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி இப்போது தெளிவாக இல்லை. அதைப்பற்றி ஆராய்ந்து அதற்குப் பிறகு முடிவு எடுக்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : ஒரு நபர்க் குழுவினுடைய அறிக்கையை இந்த அவையிலே வைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி ஆராய்ந்து அதற்கு ஏற்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.